மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் நன்றி சொல்லி முடித்துவிட்டார்.*

வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

47—

தொழிற்பயிற்சி நிலையம்

***33609 திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நிலை தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைக் கிளறும்போது மணிக் கதிர்கள் முளைக்கும். வானை வருடும்போது காற்றாலைகள் உருவாகும். ஈழத் தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்து, இரக்கமற்ற இன அழிப்பை நடத்தி விட்டு, மீண்டும் கைகோர்த்தவர்கள் மத்தியில் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தன் ஆழ்ந்த ஞானத்தால், அயராத போராட்டத்தால், மீட்டெடுத்து (மேசையைத் தட்டும்*

ஒலி) வாழ்வித்து வழி காட்டும் வாகை தலைவியை, செவ்வாயில் வெற்றிக்கொடி நாட்டும் மங்கள்யான்போல் பொங்கு தமிழர் சரித்திரத்தில் புரட்சித் தாய்க்கு புகழ் மாலை சூட்டுகின்ற பொன்னான வேளை பிறக்குது தாயே! ஆம் பிறக்கின்றது. வருகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தமிழக மக்கள் புகழ் மாலை சூட்டுகின்ற பொன்னான வேளை பிறக்குது தாயே! ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வருடப் பலனுக்கு நெல்லை நடுங்கள், 30 வருடப் பலனுக்கு மரங்களை நடுங்கள், நூறாண்டு பலனுக்கு கல்வியைக் கொடுங்கள் என்ற வைர வரிகளுக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு கண் கொடுத்த சரஸ்வதியாக, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கு கல்வியில் பல்வேறு திட்டங்களை வழங்கி, இன்றைக்கு தமிழகத்தை கல்வியில் சிறந்த மாநிலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

எங்களது சங்கரன்கோவில் தொகுதியானது விவசாயப் பெருங்குடி மக்களும், நெசவாளர் பெருங்குடி மக்களும் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும். இந்த நெசவாளர் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களின் பிள்ளைகள் மேலும் கல்வி அறிவைப் பெறுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்களுடைய தொகுதியில் ஓர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் குருக்கள்பட்டியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இந்தத் தொழிற்பயிற்சி நிலையம் மிகவும் உதவியாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மிக அதிகமாக உள்ள மாவட்டம் திருநெல்வேலி மாவட்டம். பேட்டை, புதூர், தென்காசி, அம்பாசமுத்திரம், ராதாபுரம்,

கடையநல்லூர் ஆகிய ஆறு இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 1,891 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 27 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 3,689 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. சங்கரன்கோவில் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கு 2 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 456 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் பகுதியிலே தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறைய இருக்கின்றன. அதேபோல, அருகிலுள்ள பகுதிகளிலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அமைந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். அதை எங்களுடைய சங்கரன்கோவில் தொகுதிவாழ் மக்கள் மிகவும் விரும்புகிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று சங்கரன்கோவில் பகுதியிலே அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை வருங்காலத்திலாவது அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஐ.டி.ஐ. படிக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் என்னென்ன திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளும் தமிழ்நாட்டிலேதான் மிக அதிகமான தொழிற்பயிற்சி நிலையங்கள்

இருக்கின்றன என்பதை அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் 32,821 இருக்கைகளுடன் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, தமிழகத்திலே 67,075 இருக்கைகளுடன் 488 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலேயும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் எந்தக் காலத்திலேயும் இல்லாத வகையில் ரூபாய் 134.40 கோடி செலவில் மிகச் சிறப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின்மூலமாக 23 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாநில அளவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 725 மாணவ—மாணவிகள் பயன்பெறத்தக்க அளவிற்கு ரூபாய் 170 கோடியே 67 இலட்ச ரூபாயில் பல்வேறு நலத் திட்டங்களின்மூலம் பல்வேறு சலுகைகளை மாணவ—மாணவியர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின்மூலமாக 25 தொழிற்பயிற்சி நிலையங்களில் 29 புதிய தொழிற்பிரிவுகள் 19.27 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிற அம்பாசமுத்திரம் தொழிற்பயிற்சி நிலையத்திலேகூட, தொழிற்பயிற்சிப் பிரிவு ஒன்று சிறப்போடு இன்றைக்குத் துவக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சங்கரன்கோவிலில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அதுகுறித்து தல ஆய்வு செய்யப்பட்டு தேவைப்படும் நேர்வில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று வருங்காலங்களில் அங்கே தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு சிந்திக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.